

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 162

வியாழக்கிழமை
07 மே 2026

சித்திரை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

ஸ்ரீலங்கா அரசால் இழைக்கப்பட்ட

## போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மே 7
ஈழத் தமிழர்கள் மீது ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளுக்கு எதிராக, சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று »11

வித்தியா படுகொலை வழக்கில்

## குற்றவாளிகளுக்கு விதித்த மரணதண்டனை சரியானதே

உறுதிசெய்தது உயர்நீதிமன்றம்


யாழ்ப்பாணம், மே 7
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில், சுவிஸ்குமார் உள்ளிட்ட நான்கு குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது. 2015ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் »11

மீளப்பெற முடியாத அதிகாரங்களுடன்

# சமஷ்டி முறையிலேயே புதிய அரசியலமைப்பு!

வலியுறுத்த தமிழ்க் கட்சிகள் முடிவு

**கொழும்பு, மே 7**
**மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வுடன், சமஷ்டி முறையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.** »11



## ஜே.சி.பி. – கார் விபத்து ஒருவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் ஜே.சி.பி. இயந்திரமும், காரும் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மருதனார்மடம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் »11

## செம்மணிப் புதைகுழிக்குள் நேற்று 3 என்புத்தொகுதிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து மேலும் மூன்று என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் ஒன்பதாம் நாள் »11

## தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை எம்மை ஓரங்கட்டுகின்றது

அதனால் நேற்றைய கூட்டத்தைப் புறக்கணித்தோம்
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 7
இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகளில் தமிழ்த் தேசியப் பேரவை தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றது - இவ்வாறு தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளு »11

## எரிவாயு விலை சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம், மே 7
லாப்ஸ் எரிவாயு விலை நேற்று நள்ளிரவில் இருந்து அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 5 கிலோகிராம் லாப்ஸ் எரிவாயுவின் விலை 220 ரூபாவாலும், 12.5 கிலோ »11

முன்னாள் அமைச்சர்

**குமார ஜெயக்கொடிக்கு எதிராக ஜூனில் விசாரணை ஆரம்பிக்கும்**

விரிவு பக்கம்:- 03

## பேருந்து - மோ.சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் பரிதாபச்சாவு!

புங்குடுதீவில் கோரம்



யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணம் - புங்குடுதீவுப் பகுதியில் மோட்டார்சைக்கிளும் பேருந்தும் மோதி விபத்துக்கு உள்ளானதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் »11

## தையிட்டி திஸ்ஸ விகாரையை யாழ். ஆயர் நேற்றுப் பார்வை!

யாழ்ப்பாணம், மே 7
பொதுமக்களின் காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை, யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்றுப் பார்வையிட்டார்.
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையை மையப்படுத்தி அண்மைக் காலமாகப் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. விகாரைக்காக அபகரிக்கப்பட்ட காணிகளை அள »11



“எல்லாம் விலை கூடிக்கொண்டே போகுதே தவிர இறங்கிற வழியொண்டையும் காணேல கண்டியளோ”

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4423 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 36 53 65 67 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1490 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 14 38 51 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0449 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 5 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2529 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 35 41 56 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6181 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 2 1 6 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2211 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 36 37 72 78 |
| விசேட எழுத்து | C |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0297 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 39 42 47 |

# ஜனாதிபதியின் பேச்சு பொதுவான கருத்தே!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 7

**நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட கருத்துகள், ஒரு சாதாரணப் பொதுஅறிவின் வெளிப்பாடே தவிர, நீதித் துறைக்கு விடுக்கப்பட்ட அழுத்தங்கள் அல்ல என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கமளித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழக்கு விசாரணைகள் நடைபெறும் போக்கையும், அதிலுள்ள சாட்சியங்களையும் கவனிக்கும் எவரும் ஒரு பொதுவான முடிவுக்கு வரமுடியும். அந்த அடிப்படையிலேயே ஜனாதிபதி சில கருத்துகளைப் பகிர்ந்திருந்தார். நீதிமன்ற நடவடிக்கைகளில் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ எவ்வித இடையூறுகளையும், அழுத்தங்களையும் பிரயோகிப்பதில்லை.

எந்தவொரு வழக்கின் தீர்ப்புக் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு முன்கூட்டியே எதுவும் தெரியாது. அவர் நீதியை நிலைநாட்டவேண்டும் என்ற மக்களின் ஆணையை மட்டுமே அறிவார்.


ஊழல் மோசடியாளர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் நாட்டு மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கின்றனர் - என்றார். (ச-இ)

## 628 வெளிநாட்டவர் இவ்வாண்டில் கைது

கொழும்பு, மே 7

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குடிவரவு விதிகளை மீறியமை மற்றும் சைபர் குற்றங்கள் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 628 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் இந்தியா, வியட்நாம், சீனா, மியான்மார், பிலிப்பைன்ஸ் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வாடகை வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் அலுவலக இடங்களை மையமாகக்கொண்டு இயங்கியுள்ளனர். சட்டவிரோத செயல்கள் நடந்தால் கட்டட உரிமையாளர்களும் அந்த குற்றச்சாட்டுக்கு உடந்தையாகக் கருதப்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற சட்டச்சிக்கல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## மின்சாரக்கட்டணத் திருத்தம் மக்கள் கருத்து உள்ளீர்ப்பு!

கொழும்பு, மே 7

2026ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட விசேட மின்சாரக்கட்டணத்திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்கேட்பு நேற்று இடம்பெற்றது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2026ஆம் ஆண்டின் 2 ஆம் மற்றும் 3 ஆம் காலாண்டுகளுக்காக முன்மொழியப்பட்ட விசேட மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இவ்வாறு பொதுமக்களின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட மின்சாரக்கட்டணம் தொடர்பான தீர்மானம் நாளைமறுதினம் சனிக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது என்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0889 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 7 9 5 1 5 7 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3155 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 02 56 69 79 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 32 41 53 79 |
| வெற்றி வாரம் | 5316 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0985 |
| வெற்றி இலக்கம் | 16 42 50 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 13 37 40 43 |
| சீட்டிழுப்பு வாரம் | 4867 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 06 23 48 64 |
| வெற்றி வாரம் | 2331 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 06.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 05 28 43 55 |
| வெற்றி வாரம் | 2981 |

## பல்கலை விண்ணப்பத்துக்கு மே 19 வரை காலஅவகாசம்

கொழும்பு, மே 7

2025ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 2025/2026 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 19ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதன் டிஜிற்றல் வடிவத்தை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதள முகவரியூடாகப் ஒன்லைனில் கொள்வனவு செய்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக மொத்தம் 1,76,527 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

தகுதி பெற்றுள்ள மாணவர்கள் மே 19ஆம் திகதிக்குள் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. (ச-இ)

## சமூகப் பாதுகாப்பு வரியுயர்வால் வாகனங்களின் விலை எகிறல்

கொழும்பு, மே 7

இலங்கையில் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை மே 1 முதல் நடைமுறைக்குவரும்வகையில் கணிசமாக அதிகரித்துள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை 1.25 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்தப் புதிய வரித் திருத்தம், தனிநபர் மற்றும் பதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு இடையிலான வரிவிதிப்பு நடைமுறைகளைச் சீரமைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் தனிநபர் இறக்குமதியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்த இந்த வரி, தற்போது அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் சுங்க அனுமதிப் புள்ளியிலேயே அறவிடப்படுகிறது.

அதற்கமைய இறக்குமதி செய்யப்படும் சிறிய ரக வாகனங்களின் விலை 130,000 ரூபாய் முதல் 215,000 ரூபாய் வரையிலும், நடுத்தர ரக வாகனங்களின் விலை 345,000 ரூபாய் முதல் 510,000 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரான் போர் முடிந்தாலும் தாக்கங்கள் நீடிக்கும்

## ஐ.எம்.எப். பணிப்பாளர் எச்சரிக்கை

**கொழும்பு, மே 7**

**ஈரான் போர் இப்போது முடிந்தால்கூட அதனால் ஏற்பட்ட கடுமையான பொருளாதாரத் தாக்கங்கள் உலகளவில் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா எச்சரித்துள்ளார்.**

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டு, மசகு எண்ணெய் விலை பீப்பாயொன்றுக்கு 100 அமெரிக்க டொலருக்கும் மேல் உயர்ந்துள்ளது. உரங்களின் விலை 30 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இதனால் உணவுப்பொருள்களின் விலையும் 3 முதல் 6 சதவீதம் வரை உயரக்கூடும். 2026ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வளர்ச்சி முந்தைய கணிப்புகளைவிடக் குறைவாக இருக்கும்.

போர் உடனடியாக நிறுத்தப்பட்டாலும் சர்வதேசச் சந்தையைச் சீரமைக்கக் குறைந்தது மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை ஆகும் என்பதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் நாடுகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார். (எ-இ)

## அதிக அஸ்வெசும கொடுப்பனவு விசாரணை நடத்தக் கோரிக்கை

கொழும்பு, மே 7

நலன்புரி நன்மைகள் சபை ஊடாக 5,000 இலட்சம் ரூபாவுக்கும் சற்றுக் குறைவான தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்று 'சுதந்திர சட்டத்தரணிகள்' அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த மேலதிக பணக் கொடுப்பனவு தொடர்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது. சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், அதிகாரப் பகிர்வு மற்றும் சமநிலைப்படுத்தல் முறையின்றி அரச நிதியைக் கையாள்வது ஒரு குற்றம், ஊழல் மற்றும் மோசடியாகும். அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரையின்கீழ் அரச நிதி தொடர்பான அதிகாரத்தைக் கொண்டுள்ள நாடாளுமன்றம் இந்த விடயத்தில் எழுந்துள்ள கேள்விகளுக்கான விடைகளை உடனடியாகக் கண்டறிய வேண்டும் என்று அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-இ)



## தங்க விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 7

நேற்று தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாவாக விற்பனையாகியிருந்த நிலையில், நேற்று அது 7 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 63 ஆயிரத்து 400 ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)

## குமார் ஜயகொடி மீதான வழக்கு ஜூனில் விசாரணை



கொழும்பு, மே 7

முன்னாள் எரிசக்தி அமைச்சர் குமார் ஜயகொடி மீது ஊழல் குற்றச்சாட்டின்பேரில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

## 2030ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் டொலர்!

இலங்கை தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாட்டுச் செலாவணியாக ஈட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகின்றது.

நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்கான அதிகாரபூர்வ மூலோபாயக் கட்டமைப்பாக அமைச்சரவை இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பொது மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### வெளிநாட்டவருக்கு சொத்துகளை

## வாடகைக்கு வழங்கினால் அறிவிப்பது அவசியம்!

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

வெளிநாட்டவர் ஒருவருக்கு வீடு அல்லது ஏதேனும் சொத்துகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கினால், அதுதொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப். யூ. வுட்லர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சில வெளிநாட்டவர்கள் இவ்வாறு வீடுகளை வாடகைக்குப் பெற்று நிதி சார்ந்த குற்றச்செயல்களில் ஈடுபடும் நிலைமை காணப்படுவதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




# சிறு துரும்பும்....!

தமிழகத்தின்ர புது முதல்வர் விஜய்க்கு தமிழ் அரசியல்வாதியளிட்ட இருந்து வாழ்த்துச்செய்திகள் அறம்புறமா பறந்தபடி இருக்குது. அதில முதல் முதலா கட்சி சார்பா வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கு தமிழ்த் தேசியப்பேரவை. தமிழகத்துக்கும் எங்களுக்கும் இடையிலான தொப்புள்கொடி உறவு அறாமல் இன்னும் நிலைக்கிறதுக்கு, அங்க ஆர் முதலமைச்சரா வருகினமோ அவையோட எப்பவும் நல்லுறவு வைச்சிருக்கோனும். அந்த அரசியலைப் புரிஞ்சுகொண்டு சைக்கிள் கட்சி விஜய்க்கு முந்திக்கொண்டு கடிதம் எழுதி வாழ்த்துச் சொல்லியிருக்குது. நல்ல விசயம் தான். ஆனால் இந்த இடத்தில ஒரு முன்கதைச் சுருக்க மொண்டைச் சொல்லவேண்டியிருக்குது.

நாலைஞ்சு மாதத்துக்கு முந்தி இஞ்சையிருந்து தமிழ்த்தேசியப் பேரவைக்காரர் தமிழகத்துக்கு போனவை. அங்க போய் அப்ப முதலமைச்சரா இருந்த ஸ்டாலின் தொடக்கம் சீமான் வரை எல்லாரையும் சந்திச்சவை. அதைவிட தமிழகத்தில வெறும் லெட்டர் பாட்டில கட்சி நடத்திற - அதாவது பேருக்கு மட்டும் கட்சி வைச்சிருக்கிற - சிலரையும் சந்திச்சவை. ஆனால் அப்பவே பெரிய அலையா விஜய் வந்துகொண்டிருந்தவர். அவர் ஆட்சியைப் பிடிக்காட்டியும் தமிழக அரசியலில ஒரு பாதிப்பை ஏற்படுத்துவார் எண்டு எல்லாருமே சொல்லிக்கொண்டிருந்தவை. ஆனால் "விஜய் ஒரு சினிமாக் கூத்தாடி. அவரைப் போய் நாங்கள் பாக்கிறதோ?" எண்ட ஈகோவில எங்கடையாக்கள் விஜயைச் சந்திக்காமல் வந்தவை.

அதேயாக்கள் தமிழகத்தில செல்லாக்காசா இருக்கிற, ஒரு கவுன்சிலர் உறுப்பினரைக்கூட வெல்ல வக்கில்லாத, 'நானும் கட்சி வைச்சிருக்கிறன்' எண்ட பெருமைக்காக கட்சி நடத்திறவையை எல்லாம் சந்திச்சவைக்கு விஜயைச் சந்திக்கிறது அந்த நேரத்தில கௌரவக் குறைச்சலா இருந்திருக்குபோல. இல்லாட்டி சினிமாக் கூத்தாடியை என்னெண்டு நாங்கள் சந்திக்கிறது?எண்டும் அவை நினைச்சிருக்கலாம். அவை ஒண்டை மறந்திட்டினம். அது என்னெண்டால் எங்கட ஈழப்போராட்டத்துக்கு பின்னால நிண்டு பெரும் உதவி செய்த எம்.ஜி.ஆரும் சினிமாக் கூத்தாடிதான். அவரை இண்டைக்கும் இஞ்சயே கொண்டாடுற ஆக்கள் இருக்கினம். அப்ப அவரை சினிமாக் கூத்தாடி எண்டு எங்கட சனம் நிராகரிக்கேலையே. அவ்வளவு ஏன், தமிழ்த்தேசியம் எண்டு முழங்கிற சீமான்கூட சினிமாவில இருந்து வந்தவர் தானே. அப்ப அவர்மட்டும் கூத்தாடி இல்லையோ? விஜய் மட்டும் தான் கூத்தாடியோ? ஒண்டை மட்டும் எல்லாரும் கொஞ்சம் விளங்கிக்கொள்ள வேணும். சினிமாவில இருக்கிற எல்லாரும் அரசியல் அறிவு இல்லாதவையும் இல்லை, அரசியலில இருக்கிறவை எல்லாரும் அரசியல் ஞானியளுமில்லை. அதால தமிழகத்துக்குப் போனவருசக் கடைசியில போன தமிழ்த்தேசியப் பேரவை 'சிறு துரும்பும் பல்குத்த உதவும்' எண்டதுக்காகவாவது ஒருக்கா விஜயைச் சந்திச்சிட்டு வந்திருந்தால், இப்ப உரிமையோட போய் எங்கட இனத்துக்காக ஏதும் கேட்டிருக்க ஏலும். சரி, போனது போகட்டும் இனியாவது பக்கத்துநாட்டோட, அதுவும் தமிழகத்தோட ஒட்டி உறவாடப் பழகிறதுதான் எங்கட இனத்துக்கு நல்லது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 4,000 அதிபர் வெற்றிடங்கள் விரைவில் போட்டிப்பரீட்சை!

கொழும்பு, மே 7
இலங்கையிலுள்ள பாடசாலைகளில் நிலவும் 4,000க்கும் மேற்பட்ட அதிபர் பணியிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வி மற்றும் உயர்கல்விப் பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன இதுதொடர்பில் தெரிவித்துள்ள தாவது-

அதிபர் நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், சில தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக அவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகளை விரைவில் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தற்போது விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது.

பாடசாலை நிர்வாகங்களைச் சீரமைக்கும் நோக்கில், தகுதியான விண்ணப்பதாரர்களை எவ்விதத் தாமதமுமின்றி வெற்றிடங்களுக்கு நியமிப்பதே அரசாங்கத்தின் இலக்காகும்- என்றார். (ச-இ)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் பாரம்பரியக் கூத்துப் பெருவிழா

யாழ்ப்பாணம், மே 7
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும், பிரதேச பாரம்பரியக் கூத்து இசை நாடகக் கலைஞர்களும் இணைந்து நடத்தும் பாரம்பரிய இசை நாடகக் கூத்துப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், கலாசார உத்தியோகத்தர்கள் கௌரவ விருந்தினர்களாகப் பங்கேற்க வுள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் கலைத்துறையில் நீண்டகாலமாகப் பங்காற்றி சாதனை படைத்த ஐந்து மூத்த கலைஞர்களுக்கு, அவர்களது சேவையைப் பாராட்டி 'பாரம்பரிய கலா வித்தகர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட வுள்ளது. கலாபூஷணம் க.ஆறுமுகம், கலாபூஷணம் செ.தனபாலசிங்கம், கலாபூஷணம் செ.சுந்தரம்பிள்ளை, கலாபூஷணம் இ.பராஜசிங்கம், கலைக்கிளி மி.அலேஸ் ஆகியோர் இந்த விருதைப் பெறவுள்ளனர்.

நிகழ்வில் சத்தியவான் சாவித்திரி, ஞான சௌந்தரி, அரிச்சந்திர மயான காண்டம், காத்தவராயன் கூத்து ஆகிய நான்கு பிரதான கூத்துகள் மேடையேற்றப்படவுள்ளன. (ச-159)

## திருமறைக் கலாமன்றத்தில் நாடக அரங்கியல் பயிற்சி

யாழ்ப்பாணம், மே.7
நாடகக்கலையின் மேம்பாடு கருதி, திருமறைக் கலாமன்றத்தின் நாடகப்பயிலகத்தால் நடத்தப்படும், நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின், புதிய பிரிவு அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் பயிற்சி ஆரம்பமாகும். இந்தப் பயிற்சிநெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியல் பாடத்தில் தரம் 11, 12, 13களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ளமுடியும். 6 மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறும். இதில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத்துணைக்கலைகள் (வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும். பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று, பூர்த்திசெய்து, எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கூட்டுறவுத் தொழிற்சங்கங்களை மீளச்செயற்படுத்தக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளில் உள்ள ஊழியர் தொழிற்சங்கங்களை மீளச்செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. அநேகமான கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்கள் பல வருடங்களாகச் செயற்படாமல் முடங்கிக் காணப்படுகின்றன. இவ்வாறு தொழிற்சங்கங்கள் செயற்படாமல் இருப்பதால், சங்கங்களின் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரதானமாக யாழ்.மாவட்டத்திலுள்ள சங்கங்களின் பணியாளர்கள் பழிவாங்கப்படுவது போன்ற சம்பவங்கள் அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-17)

## போலி மருத்துவர் கைது

கொழும்பு, மே 7
பொலநறுவை, தீப உயன பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டுவந்த 59 வயதான போலி மருத்துவர் ஒருவரை, பொலநறுவைப் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். இவர் ஹிங்குரகொட மருத்துவமனையின் மகப்பேறு வார்டில் பணிபுரியும் மருத்துவர் எனத் தன்னை அறிமுகப்படுத்தி மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (எ-இ)

## மாணவர்களுக்கு புலமைப்பரிசில்!

யாழ்ப்பாணம், மே 7
சமுர்த்திக் கொடியின நிதியில் வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலாளர் திருமதி.பிறேமினி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட மேலதிக செயலர் பா. ஜெயகரன், யாழ்.மாவட்டச் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் பொ.ஸ்ரீவர்ணன், சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பி.சத்தியசோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். ஆனால், உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**மிதுனம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது உற்சாகம் தரும்.

**கடகம்:** தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும் பிற்பகலுக்குமேல் புதிய முயற்சி களைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. வெளியூர்ப்பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன்வகையில் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# ஈழமும், காலமும்!

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், நடிகருமான விஜய் தமிழக முதல்வராக இன்று ஆட்சியைப் பொறுப்பேற்கவுள்ளார். திராவிட சித்தாந்தங்களில் ஊறித்திளைத்து, தி.மு.க., அ.தி.மு.க. என்னும் இருபெரும் கட்சிகளால் மாறிமாறி ஆளப்பட்ட தமிழகம் இன்று தனக்கான மாற்றுத்தெரிவாக தமிழக வெற்றிக்கழகத்தை நாடியுள்ளது. தமிழகம் என்றாலே அரசியற்கட்சிகள் தான். கடந்த நூறு வருடங்களில் (இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்து) ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசியற் கட்சிகளை தமிழகம் பார்த்து விட்டது. எனினும், ஆள்வதற்கான வாய்ப்பு அவற்றில் எவற்றுக்கும் வாய்க்கவில்லை. விஜயின் வெற்றியை 'திரைக்கவர்ச்சி' என்ற ஒற்றைச் சொல்லுக்குள் அடக்கி விட முடியாது. அதேநேரம் இந்த வெற்றிக்கான கனதியை - பதிலுதவியை வழங்கவேண்டிய பொறுப்பு விஜய்க்கு உள்ளது. இதில், ஈழத்தமிழர் நலன்களும் பிரதானம் பெறுகின்றன.

முன்னாள் முதல்வர் ஸ்டாலின் கடந்த மூன்று தடவைகள் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற கௌத்தூர் தொகுதியில் தோல்வியுற்றார் என்பதற்காக, அவரின் திட்டங்களையும் நகர்வுகளையும் புறமொதுக்க முடியாது. குறிப்பாக ஈழத்தமிழர் விடயத்தில் மு.க.ஸ்டாலினின் நகர்வுகள் காத்திரமானவையாகவும், தமிழர்களை ஓரணியில் ஒருங்கிணைக்கும் சக்தியாகவும் அமைந்திருந்தன. 2009ஆம் ஆண்டின் பின்னர் அதாவது விடு தலைப்புலிகள் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப் பட்டதன் பின்னர் தமிழக -ஈழ அரசியல் உறவென்பது அவ்வளவு ஆழம்மிக்கதாகவும் நேர்த்தியாகவும் இருக்கவில்லை. அந்த உறவானது வெறும் அறிக்கைகளை மையப்படுத்தியதாகத்தான் இருந்தது. இந்த சபிக்கப்பட்ட போக்குக்கு, ஒரு காத்திரமான முற்றுப் புள்ளி வைத்து - ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடை யிலான நீண்டதும் நெடியதுமான உறவில் - ஒருவர லாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தும்வகையில் ஸ்டாலின் செயற்பட்டார் என்பது மறுக்கமுடியாத விடயம்.

ஆட்சியேறிய பின்னர் ஸ்டாலின் தனது அமைச்சரவையில், அதுவரைகாலமும் இருந்துவந்த 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் நலன்' என்ற துறையை 'வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்' என மாற்றினார். இந்த மாற்றம் ஈழத்தமிழர் நலனை மையப்படுத்தியதுதான் என்பதில் சந்தேகக் கண் தேவையில்லை. அத்துடன் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர் அகதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவர்களுக்கான இதர நலத்திட்டங்கள் என்பனவும் விரிவாக்கம் செய்யப்பட்டன. உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களை ஓரணியில் இணைப்பதற்காக அயலகத் தமிழர் விழா எனும் அரச விழாவை நடத்தினார். இதில் ஈழத்தமிழர்களை பிரதானப்படுத்தினார். இவையெல்லாம், ஈழத்தமிழர் விவகாரத்தில் ஸ்டாலின் எவ்வளவு அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் இருந்தார் என் பதைத்தான் மெய்ப்பிதம் செய்தன -செய்கின்றன.

தமிழகத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அகதிகளாகத் தங்கியுள்ள ஈழத்தமிழர்களுக்கு இந்தியப் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதற்காக ஸ்டாலின் போராடினார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு சிலவாரங்கள் முன்னர்வரை, அதாவது பரப்புரைகள் ஆரம்பிக்கும்வரை இந்தப் போராட்டத்தை அவர் முன்னெடுத்தார். எனவே, இதைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு முதல்வர் விஜய்க்கு உள்ளது. தனது தேர்தல் பரப்புரைகளின் ஈழத்தமிழர் நலன்கள் தொடர்பில் அவர் வெளிப் படையாகக் காட்டிய அக்கறை, எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கக் காரணமாக அமைந் திருக்கின்றது. விஜயின் வருகை திரைக்கவர்ச்சியால் மட்டும் நிகழ்ந்துவிடவில்லை என்பதற்கு ஈழமும், காலமும் தான் பதில்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு**

**பொருள்:** குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது. துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.




# தரம் 2–,6 புதிய பாடத்திட்டங்கள் அடுத்தாண்டு முதல் ஆரம்பம்!



## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

**இலங்கையின் கல்வித்துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் 2026ஆம் ஆண்டு தரம் ஒன்றுக்காக ஆரம்பிக்கப்பட்ட கல்விச்சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அடுத்த ஆண்டு முதல் தரம் 6 மற்றும் தரம் 2 ஆகியவற்றுக்கு புதிய பாடத்திட்டங்கள் மற்றும் கற்றல் முறைகள் அறிமுகப்படுத்தப்படும் என கல்வியமைச்சர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது- இதற்கான பாடக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, கற்றல் தொகுதிகள் மீளாய்வு செய்யப்பட்டுவிட்டன. இம்மாத இறுதிக்குள் அவை அச்சிடப்படும். புதிய பாடத்திட்டத்துக்கு ஆசிரியர்களைத் தயார்படுத்தும் பயிற்சிகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முன்னெடுக்கப்படும். கல்விச் சீர்திருத்தப் பணிகளுக்காக தேசிய மட்டத்திலான வழிநடத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக்குழுவின் மேற்பார்வையின் கீழ் இவையனைத்தும் இடம்பெறுகின்றன. இந்தக் கல்விச் சீர்திருத்தங்களுக்கு உலக வங்கியிடமிருந்து எவ்வித நிதியுதவியும் பெறப்படவில்லை - என்றார். (ச–இ)

## இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது

கொழும்பு, மே 7

200,000 ரூபா பணத்தை இலஞ்சமாகக் கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், பேலியகொடை தலைமையக பொலிஸ் நிலையத்தின் கொன்ஸ்டபிள் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காது விடுவிப்பதற்காக குறித்த கொன்ஸ்டபிள் இலஞ்சமாக 2 இலட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டாரென தெரியவந்துள்ளது. (ச–இ)

## சுங்கத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம்

இலங்கை சுங்கத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியும் மேலாண்மை சேவைகள் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகமுமான விமல் எஸ்.கே.லியனகமவை நியமிக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போதைய சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி பி.அருகொட நேற்றுமுன்தினம் தனது சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ளார். சுங்கத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக லியனகம பொறுப்பேற்கவுள்ளார். (ச–இ)

## ஜோன்ஸ்டன் வழக்கு சாட்சிக்கு பிடியாணை

கொழும்பு, மே 7

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கின் சாட்சி ஒருவரைக் கைது செய்து முற்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், சதொச நிறுவன ஊழியர்களை அவர்களது உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்து விடுவித்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் ஊழல் புரிந்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் 12 ஆவது சாட்சி நேற்றுமுன்தினம் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகாததை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ச–இ)

## பாதாளக்குழுவின் உறுப்பினர் கைது

கொழும்பு, மே 7

வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் நெருங்கிய சகா ஒருவர், ரி56 துப்பாக்கிக்கான தோட்டாக்கள் மற்றும் மகசினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீனட்டியன பகுதியில், மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச–இ)

**நாளை**
வெள்ளிக்கிழமை- சித்திரை 25
08.05.2026
சுபநேரம் : 06.00 – 07.30
ராகுகாலம் : 10.30 – 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் ஈழத்தமிழர்களை வலுவாக்க வேண்டும்

## புதிய முதல்வர் விஜய்க்கு தமிழ்த் தேசியப் பேரவை மடல்

**யாழ்ப்பாணம்,மே 7**

**தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம், ஈழத் தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்குப் புதிய நம்பிக்கையையும் வலுவையும் தரவேண்டும் என தமிழ்த் தேசியப் பேரவை தெரிவித்துள்ளது.**

தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ள ஜோசெப் விஜய்க்கு தமிழ்த் தேசியப் பேரவை தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தமிழகம் எப்போதும் ஒரு பெரும் அரணாகத் திகழ்கின்றது. ஈழ விடுதலைப் போராட்டத்தின் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் மீதும், எமது மக்கள் மீதும் தமிழகத் தலைவர்கள் கொண்டிருந்த அளவற்ற அன்பு வரலாற்றில் பொன்னெ முத்துக்களால் பொறிக்கப்பட்டவை. அன்று எமது மக்களின் துயர்துடைக்க எவ்வாறெல்லாம் தமிழ்நாடு துணை நின்றதோ, அதே போன்றதொரு உறுதியான ஆதரவை உங்களிடமிருந்தும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு பின்னரும் தீர்க்கப்படாமல் உள்ள ஈழத் தமிழர்களின் தேச அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுத்தர சர்வதேச அரங்கிலும், இந்திய மத்திய அரசாங்கத்திடமும் எமது மக்களின் பலமான குரலாக நீங்கள் ஒலிக்க வேண்டும். தொப்புள்கொடி உறவுகள் என்ற உணர்வோடு, எமது தாயகத்தின் விடியலுக்காக உங்கள் கரங்கள் நீளும் என்ற பெரும் எதிர்பார்ப்பு எங்களுக்குண்டு- என்றுள்ளது. (ச-27-66)

# அனுபவமற்ற நியமனங்களே நிதிமோசடிக்குக் காரணம்!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே 7

திறைசேரியின் செயலாளராக அனுபவமற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை மற்றும் நிதி நிர்வாகத்தில் நிலவும் சட்டரீதியான குளறுபடிகள் என்பவையே அரச நிதி மோசடிக்கு காரணமாக அமைந்துள்ளன என்று அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவர் திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு நிதி முகாமைத்துவம் குறித்து எவ்வித அனுபவமும் இல்லை. இது நிர்வாகத்தில் தேவையற்ற முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்.

கடன் பேச்சுவார்த்தைகளுக்கு மட்டுமே பொறுப்பான வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், நிதி செலுத்தும் நடவடிக்கையில் ஏன் தலையிட்டது? சட்டப்படி அரச கடன் முகாமைத்துவ அலுவலகம் ஊடாகவே இந்தக் கொடுப்பனவுகள் இடம்பெறவேண்டும். விசாரணைகளுக்காக அழைப்பு விடுத்தும், திறைசேரி அதிகாரிகள் மூன்று வாரங்களாக அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு முன்னிலையாகவில்லை. ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாகக் கடிதம் அனுப்பப்பட்ட பின்னரே திறைசேரி செயலாளர் குழு முன்னிலையில் சமுகமளித்தார்.

இந்த மோசடியைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு சி.ஐ.டி.யிடம் உள்ளது. ஆனால், இறுதியில் இந்த இழப்பை ஈடுகட்ட வேண்டியது நாட்டு மக்களே - என்றார். (ச-இ)

# 2.5 மில்லியன் டொலர் மோசடிக்கு ஜனாதிபதி பொறுப்புக்கூறுங்கள்

## நிசாம் காரியப்பர் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

திறைசேரியின் 2.5 மில்லியன் டொலர் மோசடி தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோரவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

திறைசேரியின் பணம் தவறான மின்னஞ்சல் முகவரியில் வந்த வங்கி கணக்குக்குப் செலுத்தியதாலே இந்த தவறு இடம்பெற்றிருக்கிறது.

மின்னஞ்சல் முகவரி ஒன்றை வாசித்து புரிந்துகொள்ள தெரியாத அதிகாரிகளை நிதி அமைச்சுக்கு நியமித்த, ஜனாதிபதி இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து இடம்பெற்ற தவறுக்காக மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்.

அதேவேளை, இந்திய தமிழ் நாட்டு முதலமைச்சராகத் தெரிவாகியுள்ள விஜய்க்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக எமது வாழ்த்துகள். தமிழகத்துக்கு ஒரு விஜய் இருப்பது போல, எமக்கும் இன, மத பேதங்களுக்கு அப்பால் கிழக்கு மாகாணத்தில் ஒரு 'இளைய தளபதி' இருக்கிறார். அவர்தான் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன். அவரை கிழக்கு மாகாண முதலமைச்சராக்குவதற்கு அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி வழிவகை செய்ய வேண்டும். - என்றார். (ச-இ)

# நாட்டுக்குப் புறப்பட்டார் மாலைதீவு ஜனாதிபதி

கொழும்பு, மே 7

இலங்கைக்கான அரச பயணத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாலைதீவு ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக் குழுவினர் நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து கொண்டு, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மாலைதீவு ஜனாதிபதி நாட்டுக்கு வந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் இந்த பயணம் வெற்றிகரமாக அமைந்தது. (எஇ)

# இலங்கை மின்சாரசபைக்கு 11 பில். ரூபா வங்கிக்கடன்!

## வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

2024 டிசெம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி, இலங்கை மின்சார சபை அரச வங்கிகளிடமிருந்து பெற்ற மொத்த நிலுவையிலுள்ள வங்கிக் கடன்கள் 11 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என வலுசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், பல அரச வங்கிகளிடமிருந்து மின்சார சபை கடன்கள் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தினார். 2026 பெப்ரவரி 28ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய வங்கி இருப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வங்கி கடன்களை குறைப்பதற்காக, செலவை ஈடுகட்டக்கூடிய ஒரு மின்சாரக் கட்டண பொறிமுறையை உறுதிப்படுத்த அரசாங்கம் உழைத்து வருகிறது. மின்சார உற்பத்திச் செலவைக் குறைத்தல் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் ஆகிய இரண்டு வழிகளில் இந்த இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. மின்சக்தித் துறையின் நிதி நிலையை மேம்படுத்துவதற்கும், நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட பெரும் மறுசீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இலங்கை மின்சார சபை கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டமைப்புச் செயல்பாடுகளுக்குப் பொறுப்பான 6 புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள் தற்போது அதிகாரப்பூர்வமாகச் செயல்படத் தொடங்கியுள்ளன. இந்த மறுசீரமைப்பின் மூலம் மின்சக்தி துறையின் ஒட்டுமொத்த நிதி நிலைமையைச் சீரமைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எஇ)



# விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வலியுறுத்து

கொழும்பு, மே 7

கிழக்கு மாகாண விவசாயிகள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வு வழங்கவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் வலியுறுத்தியுள்ளார். நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாயிகளின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு வழங்காவிட்டால் விவசாயிகள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள். நாங்கள் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம்என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# விவாகரத்துக் கோரிய ஆத்திரத்தில் தென்னைகளை சாய்த்த கணவன்!



கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி, செல்வாநகர் பகுதியில் மூன்று பெண் பிள்ளைகளின் தாய் ஒருவரின் வீட்டில் நின்ற தென்னை மரங்களை, அவரது கணவர் மரம் வெட்டும் இயந்திரம் மூலம் வெட்டிச் சாய்த்துள்ளார்.

குறித்த பெண் தனது கணவரிடமிருந்து விவாகரத்துக்கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், இதனால் ஆத்திரமடைந்த கணவன் இந்த அடாவடிச் செயலில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு, திருட்டுத்தனமாக வீட்டுக்குள்ள நுழைந்த கணவன், தன்னுடன் எடுத்து வந்த மரம் வெட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தி காய்க்கும் நிலையிலிருந்த தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியுள்ளார்.

சம்பவம் குறித்துப் பாதிக்கப்பட்ட பெண் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-214)

# வடக்கில் கூட்டுறவுத்துறையை ஒருங்கிணைப்பதற்குத் திட்டம்




யாழ்ப்பாணம், மே 7

வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுப் பணிகளை மேலும் வினைத்திறனாக முன்னெடுக்கும் நோக்கில், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் , வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளுக்கிடையிலான சிறப்புக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் விசேடமாக இந்த விடயம் ஆராயப்பட்டது.

கூட்டுறவுப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள், பணியாளர்களுடன் தொடர்புடைய நிர்வாக விடயங்கள், கோரிக்கைகளை தாமதமுமின்றி விரைவுபடுத்துதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இதில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர், வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர், ஆணைக்குழுவின் உறுப்பினர் மற்றும் மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் கலந்து கொண்டனர். (க-66)





# யாழ்.பொது நூலகத்தின் மாதாந்தக் கருத்தாடல்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.பொதுசன நூலகத்தின் மாதாந்த முழுமதிக் கருத்தாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, பெண் சுயதொழில் முயற்சியாளர்களைக் கௌரவப்படுத்தும் நோக்கில் இந்த நிழ்வுவு நடத்தப்பட்டது.

இதில் அனுபவப்பகிர்வும் சந்தைப்படுத்தலும் எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட குட் லைப் நிறுவுநர் ஜனா ஜெயகாந்தி வளவாளராகக் கலந்து கொண்டார். (க-159)

# சைவ சமயப் பரீட்சை



யாழ்ப்பாணம், மே 7

சைவ சமய எழுச்சிப் பெருவிழாவை முன்னிட்டு கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலய நற்பணி இளைஞர்களின் ஏற்பாட்டில் சைவ சமயப் பரீட்சை கடந்த சனிக்கிழமை குருசாமி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பரிபாலன சபை அனுமதியுடனும் வலயகல்வித் திணைக்களத்தின் அனுமதியோடும் குருசாமி வித்தியாலய ஒத்துழைப்புடனும் நற்பணி இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஒத்துழைப்புடனும் இந்தப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், தைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி நவபுரம் எருதிடல் அ.த.க. பாடசாலை, வெளி வலய மாணவர்கள் என மொத்தமாக 196 மாணவர்கள் பரீட்சையில் பங்கேற்றனர். (எ-41-159)



# அராலி இந்துவில் நல்வாழ்வு மையம்

யாழ்ப்பாணம், மே 7

அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியில் நல்வாழ்வு மையம் கடந்த திங்கட்கிழமை வாழ்நாள் பேராசிரியர் ந. சிறிகரனால் திறக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் மாணவர்களின் உளநல ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர். (க)

தந்தை செல்வா நினைவுதினத்தை முன்னிட்டு, தந்தை செல்வா நற்பணிமன்ற அனுசரணையுடன், நற்பணிமன்ற அங்கத்தவர்களுக்கு, யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக் கழக அலுவலகத்தில் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணத்தில் திரைக்காட்சிகள்

யாழ்ப்பாணம், மே 7

**யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 29 ஆவது திரையிடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள 'எங்கள் புத்தகங்கள்' இல்லத்தில் நடைபெறவுள்ளது.**

117 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த விசேட காட்சியில் அரிய ஆடல், பாடல் மற்றும் சுவடிப் படங்கள் திரையிடப்படவுள்ளன. இதன்போது அபரூப பட்நாயக் மற்றும் பூர்ணத் மொகந்தி ஆகியோரின் இரண்டு ஒடிசி நடனங்கள், ஆர். பாலசரஸ்வதி தேவி, கண்டசாலா, பி. லீலா, தியாகராஜ பாகவதர், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, டி. எஸ். பகவதி, டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா, பி. ஏ. பெரியநாயகி ஆகியோரின் காலத்தால் அழியாத பாடல்கள், எம். எஸ். சுப்புலட்சுமி, மகாநதி ஷோபனா, பம்பாய் ஜெயஸ்ரீ ஆகியோரின் சங்கீதக் கச்சேரிகள். சில்லையூர் செல்வராஜனின் திரைச்சுவடியிலான 'கமம்', நவயுகாவின் 'வாகை', அஜித் உம்மன் காதம்பரி சிந்தாமணி ஆகியோரின் 'லிஜ்ஜத் சகோதரித்துவம்' ஆகிய மூன்று சுவடிப் படங்கள் என்பன திரையிடப்படவுள்ளன. பழைய நினைவுகளையும் கலை நயங்களையும் மீட்டெடுக்கும் இந்தத் திரையிடல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அனுமதி: இலவசம் என்றும் திரைப்படக்கழகம் ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்
## (01.06.2026 - 31.05.2029 வரை)

சபைக்குச் சொந்தமான கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம் :- 07.05.2026 தொடக்கம் 20.05.2026 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 - பி.ப.3.00 மணி

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :- 21.05.2026ம் திகதி மு.ப 10.00 மணி வரை கேள்விப்பத்திரம்

திறக்கப்படும் திகதி :- 21.05.2026ம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்விப்பத்திரம்

திறக்கப்படும் இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

| இல | சந்தைக்கடை இல. | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் ரூபா (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா (வரிகள் நீங்கலாக) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | 1U | 1,100.00 | 14,400.00 | 144,000.00 |
| 2 | 2U | 1,100.00 | 14,400.00 | 144,000.00 |
| 3 | 3U | 1,100.00 | 14,400.00 | 144,000.00 |
| 4 | 4U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 5 | 5U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 6 | 6U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 7 | 7U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 8 | 8U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 9 | 9U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |
| 10 | 10U | 1,100.00 | 15,480.00 | 154,800.00 |

1. குறித்த கடைகளது குத்தகை வகை வருடாந்த குத்தகை அடிப்படையிலாகும் என்பதுடன் 2026.06.01 – 2029.05.31 வரையான காலப்பகுதிக்கு மட்டுமேயாகும்.
2. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, உரிய காலப்பகுதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும், கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
4. கேள்வி தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கே உள்ளது.
5. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
6. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் குத்தகைதாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தினை (வரிகள் உட்பட) சபையால் அறிவிக்கப்படும் காலப்பகுதிக்குள் பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்தி சபையின் நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும்.
8. கேள்வித்தொகையின் 1/36 பங்கு பணம் மாதாந்த குத்தகை தொகையாக செலுத்த வேண்டும் என்பதுடன் குறித்த மாத குத்தகை பணத்தை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் இறுதி அல்லது அதற்கு முன்னரான வேலை நாளில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறுமிடத்து மாத குத்தகை தொகையில் 10% தண்டப்பணம் மேலதிகமாக அறவிடப்படும்.
9. வருடாந்த வியாபார உரிமம்/வரி கட்டணத்துடன் கடைகளுக்கான மாதாந்த மின்கட்டணம் குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டும்.
10. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். 07.05.2026



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
03.07.1950

மறைவு
04.05.2026

அல்வாயைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட
எமது அன்புக்கும் நட்புக்கும் உரிய
**முருகேசு இராஜகோபால்**
(உரிமையாளர் - யமுனா ஸ்ரோர்ஸ், நெல்லியடி)
அவர்கள் (04.05.2026) திங்கட்கிழமை
காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த
துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும்
ஊழியர்களும்

S.V.முருகேசு
154 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.M (Pvt) Ltd
122 Dam St, Colombo 12

S.V.என்ரபிரைஸ்
கரடிபோக்கு சந்தி,
கிளிநொச்சி.

(CR47500) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


யாழ் போதனா வைத்தியசாலையில் 2024 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை (இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் (steel), மரஅலுமாரிகள், மரக்கதிரைகள், கணணிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மின் விசிறிகள், பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள் பழைய பிளாஸ்ரிக் பொருட்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் ஏனைய தளபாட உபகரணங்கள்) ஏல விற்பனை செய்தல்

தலைவர், ஏல விற்பனை சபை 2024 / 2026 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் வைகாசி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து 19 ஆம் திகதி (18.05.2026-19.05.2026) வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களை பெற விரும்புபவர்கள் வைத்தியசாலை காசாளரிடம் ரூபா 1,000.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 20.05.2026 திகதி காலை 11.00 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதி கூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்வி மனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலை கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 0212223149, 021-2212482 இனை அழைத்து பெற்றுக்கொள்ளமுடியும்.

பணிப்பாளர் (தலைவர்)
ஏலவிற்பனை சபை
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
06.05.2026

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




சரசாலை வடக்கைச் சேர்ந்த

**சோ. சந்திரசிகாமணிக்குருக்கள்**
**அருந்தவநாயகி அம்மா**

அவர்களின்

**50 ஆவது ஆண்டு திருமண நாள்** அசைந்து இசைதரும் பராபவ வருசம் சித்திரை திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை 07.05.2026 அன்று அவர்களின் இல்லத்தில் நடைபெறுகின்றது. இவர்கள் பல்லாண்டு காலம் வாழ பெரியத்தாய் முத்துமாரி அம்மனின் திருவருள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

அன்பே சிவம்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 561 4672, 077 844 8668

ER 47503(N-1)

# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சினி சுத்தானந்தன்



செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும், லண்டன் Croyden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ரஞ்சி என அன்பாக அழைக்கப்படும் திருமதி ரஞ்சினி சுத்தானந்தன் அவர்கள கடந்த (01.05.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (நெசவு ஆசிரியர்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (கந்தளாய் விதானையார்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுத்தானந்தன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சுலக்சன் (Senior Resourcing Manager, Home affairs UK), சுகாஷன் (Deputy Resourcing Consultant, Home affairs UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வித்தியாசாகரன் (பிரான்ஸ்), மற்றும் திவ்வியப்பிறேமா, ரவீந்திரராஜா (அமெரிக்கா), தர்மரட்ணம் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), ஜெயராஜா (லண்டன்), ஜெயபாலன் (திருகோணமலை), உஷாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேஷ், பத்மா, தவமணி, யோகமணி, யமுனா, சாந்தகுமாரி, விஸ்வநாதன், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் அழகுராணி, காலஞ்சென்ற சச்சிதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிறேம்ராஜ் மற்றும் சிவரஞ்சினி, சௌந்தரப்பிரியா, ஷாமினி ஆகியோரின் சிறிய தாயாரும், பிரதீபா, விபூசனா, கணதீபன், நிரோசன், யதுசன், விதுசன், தரணீபன், காலஞ் சென்றவர்களான சுதன், தரன் (கனடா), மற்றும் மதன் (கனடா), மதுரா, மாதுளா மற்றும் கபிஷாளினி ஆகியோரின் மாமியாரும், சுரபி, இராகவேந்தன், ஓவியா, இலக்கியா, லக்சுதன், சச்சிதன், அபூர்வன், அதிசயா, கிரிஷ் ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
சி.சுத்தானந்தன் - 076 594 6848 (கணவர்)

மகன் - சுலக்சன் - 0044 7842 009 268 (UK), சுகாஷன் - 0044 7471 367 609 (UK)
சகோதரன் - ரவீந்திரராஜா - 01929 257 9408 (USA), மகேஸ்வரன் - 0044 474 5970 4831 (UK)
சகோதரன் - தர்மரட்ணம் - 033 652 035 975 (France), பிறேம்ராஜ் - 077 248 7190
மைத்துனர் - கணேஷ் - 077 978 9696 (Srilanka)

பிறப்பு
20.05.1959

இறப்பு
01.05.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அபிவிருத்திகளில் பல்கலைக்கழக பங்களிப்புத் தேவை

## ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 7

வடக்கு மாகாணத்தை 'பின்தங்கிய கிராமங்கள் இல்லாத மாகாணமாக' மாற்றுவதற்குப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் பங்களிப்பு அவசியம் என ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண நிர்வாகம் மற்றும் மாகாணத்தின் திட்டமிட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் பங்களிப்பை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது தொடர்பான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஏற்கனவே வவுனியாப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ். பல் கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல், தொழில்நுட்பப் பீடங்களுடன் இணைந்து பணியாற்றிவருகிறோம். தற்போது கலைப்பீடத்தின் சமூகவியல் மற்றும் பண்பாட்டு ஆலோசனைகளையும் உள்வாங்குவதே எமது நோக்கம்.

கடந்த காலப் பிரச்சினைகள் மற்றும் அதன் விளைவாக உருவான புதிய சிக்கல்களைத் தீர்க்க, கல்வியாளர்களின் ஆலோசனைகள் மாகாண நிர்வாகத்துக்குப் பக்கபலமாக இருக்கும் - என்றார். இதன்போது யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத் துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தெரிவிக்கையில், எமது மரபுரிமைகள் சிதையாதவகையிலான திட்டங்களே அவசியம். இறக்குமதி செய்யப்பட்ட திட்டங்கள் எமது மண்ணுக்குப் பொருந்தாது. கலைப்பீட மாணவர்களை மாகாண நிர்வாகப் பணிகளில் உள்ளகப் பயிற்சிக்கு உள்வாங்குவதன் மூலம் அவர்களின் அனுபவத்தை மேம்படுத்தலாம். மாகாணத்தின் தேவைகளுக்கேற்ப மாணவர்களால் ஆராய்ச்சிகளைச் செய்து தரமுடியும்- என்றனர். அதற்குப் பதிலளித்த மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், மாணவர்களின் உள்ளகப் பயிற்சி தொடர்பாகப் பல்கலைக்கழகத்துடன் விரைவில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். புதிய கற்கைநெறி மாணவர் களுக்கான வேலைவாய்ப்புத் தடைகளை நீக்க, சேவைப் பிரமாணக் குறிப்பில் மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். எதிர்காலத்தில் மாகாண அமைச்சுகள் தத்தமது துறை சார்ந்த பேராசிரியர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி திட்டங்களைத் தயாரிக்கும்- என்றார்.

(ச-113)



# நெல்லியடி மத்திய கல்லூரி கால்பந்தாட்டத்தில் அபாரம்!

யாழ்ப்பாணம், மே 7

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில், நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணத்தை வென்றுள்ளது. இதன் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அணியும் மோதின. போட்டி முடிவடையும் வரை இரு அணி

களாலும் கோல் எதனையும் பெற முடியவில்லை. தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆட்டங்களில் இரு அணிகளும் சம பலத்துடன் விளங்கியதால் ஆட்டம் கோல் இன்றி சமநிலையில் முடிவடைந்தது. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 3ஆம் இடத்தை பெற்றது. (ச-422)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கிவரும் எரிவாயு விநியோக நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் கோரப்படுகின்றனர்.

• வாகன உதவியாளர் [Vehicle Helper]

கொழும்பிற்கு எரிவாயு ஏற்றச்செல்லும் கனரக வாகனத்திற்கு வாகன உதவியாளராக சென்று வர வேண்டும்.

• சாரதி

கனரக வாகன அனுமதிப்பத்திரம் அவசியம் [AD License] சிலாண்டர் ஏற்றி இறக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். சாவகச்சேரியை அண்மித்தவர்கள் மற்றும் அனுபவமுடையவர்கள் விரும்பத்தக்கது.

(CR 47507) A

விபரங்களுக்கு: 077 225 0149

## சாவகச்சேரி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வது) (லிப்கோ)

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அழைப்பிதழ் 2026

இடம் : சங்க தலைமைக் காரியாலய பிரதான மண்டபம்


காலம் : 09.05.2026 சனிக்கிழமை

நேரம் : முற்பகல் 10.30 மணி

(cr.47504) (N-1)

தலைவர்: திரு.அ.க.ஸ்ரீபன் (சங்கத் தலைவர்)

## மரண அறிவித்தல்



மண்ணில்: 29.04.1974 விண்ணில்: 06.05.2026

### பசுபதி உமாகந்தன் (சரவணன்)

எங்கள் குடும்பத்தின் தூணாய் இருந்தீர்கள்
உங்கள் பாசத்தில் நாங்கள் வாழ்ந்தோம்
உங்கள் அரவணைப்பில் நிம்மதி கண்டோம்
இன்று எங்களை விட்டு நீங்கிய போதும்
உங்கள் நினைவுகள் நெஞ்சில் நிழலாய் நிற்கும்
இறைவன் பாதம் சேர்ந்த உங்களுக்கு
நித்திய அமைதி கிடைக்கட்டுகம்....
என்றென்றும் எங்கள் இதயத்தில் வாழ்வீர்கள்

எங்கள் குடும்பத் தலைவன் பசுபதி உமாகாந்தன் (சரவணன்) அவர்கள் நேற்று (06.05.2026) புதன்கிழமை இறைவன் பாதம் சேர்ந்துள்ளாளர். அவரின் இறுதி நிகழ்வு அவரது இல்லத்தில் நாளை (08.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 61273) A

இல.111,
கனகாம்பிகைகுளம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போர்க்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது, முள்ளிவாய்க்காலில் வைத்து எமது உறவுகள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன. உலகப்போரியல் அறங்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு, கொத்துக்குண்டுகளாலும் இரசாயனக் குண்டுகளாலும் எமது மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டனர். எனினும் இன்றுவரை எமக்கான நீதி வழங்கப்படவில்லை. போர்க்குற்றத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் சர்வதேச நாடுகளிடம் தமக்கான நீதியை இன்னமும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். எனவே, எமக்கு நீதியை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்.
எமது உரிமைக்காகவும், இருப்புக்காகவும், எமது நலவாழ்வுக்காகவும் போராடியவர்கள், இன்றளவும் சிறைகளில் அரசியற்கைதிகளாக வாடுகிறார்கள். அவர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கமாவது அதற்கு வழிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

## சமஷ்டி...

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று நடைபெற்றது.
இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல அரசியற் கட்சிகள் கலந்துகொண்டன. இதன்போது, புதிய அரசியலமைப்பில் எட்டு அம்சங்களை வலியுறுத்துவது என்பதில் அனைத்துக் கட்சிகளும் உடன்பட்டுள்ளன.
இதன்படி,

✦ இலங்கை, சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள மாநில அரசுகள் இணைந்த சமஷ்டி (இணைப்பாட்சி) அரசாகும்.

✦ தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுள்ள தேசிய இனம் என்பதுடன் வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலம் தமிழ்பேசும் மக்களின் மரபு வழித்தாயகமாகும்.

✦ தேசியப் பாதுகாப்பு, நாணயம் மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகள் போன்றவை தவிர்ந்த ஏனைய விடயங்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

✦ மாநில அரசுகளின் இறைமையானது அந்த மாநிலங்களின் மக்களுக்கானதும் பாராதீனப்படுத்தப்பட முடியாததுமாகும்.

✦ மத்திய அரசின் அதிகாரங்களும் மாநில தன்னாட்சி அரசுகளின் அதிகாரங்களும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்கு வழங்கப்படும் விடயங்கள் தொடர்பான முழு அதிகாரங்களும் மாநிலங்களுக்கே இருக்க வேண்டும். அத்துடன் அவை மீளப்பெறப்பட முடியாதவைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

✦ இலங்கை அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான அரசியலமைப்புசார் பிணக்குகளையும், மாநில அரசுகளுக்கு இடையிலான அரசியலமைப்புசார் பிணக்குகளையும் மற்றும் ஏனைய அரசியலமைப்புசார் விடயங்களையும் விசாரித்து தீர்ப்பளிப்பதற்கென தனியான அரசியலமைப்பு நீதிமன்றம்; அமைக்கப்படல் வேண்டும்.

✦ இலங்கை அரசு ஒரு மதச்சார்பற்ற நாடாகும்.

தமிழ் மொழியும், சிங்கள மொழியும் சம அந்தஸ்துள்ள தேசிய, அரச கரும, சட்டவாக்க, நிர்வாக மற்றும் நீதிமன்ற மொழிகளாகும். ஆங்கில மொழி இணைப்பு மொழியாக அமையும் ஆகியவிடயங்கள் முன்னிறுத்தப்படும். அத்துடன், மேற்குறித்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் உருவாக்கப்பட்ட வரைபுக்குழு புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான விரிவான வரைபை தயாரிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது - என்றுள்ளது. (அ-ம-26)

## தமிழ்ச்...

மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
இது தொடர்பில் உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் சில முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முன்னெடுப்புகளில் அனைத்துக் கட்சிகளும் பங்காளிகளாகச் செயற்பட வேண்டும் என்று எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப நாமும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம். எனினும், துரதிஷ்டவசமாக தமிழ்த் தேசியப் பேரவை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.
தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் கலந்துரையாடலுக்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கே அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஆனால், நாங்கள் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவையாகவே இயங்கி வருகின்றோம். எனவே, காங்கிரஸுக்குத் தனியாக அழைப்புக்கடிதம் அனுப்பாமல், தமிழ்த் தேசியப் பேரவைக்கு அழைப்புக் கடிதங்களை, அறிக்கைகளை அனுப்புமாறு நாம் கூறியுள்ளோம். இது தொடர்பான அறிவுறுத்தல்களை எழுத்துமூலம் வழங்கியிருந்தும் தற்போதுவரை அந்த மாற்றம் செய்யப்படவில்லை.
இதுதொடர்பில் வினவியபோது, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளுக்கு மட்டும்தான் அழைப்பு விடுக்கப்படுகின்றது என்று கூறினர். அவ்வாறாயின், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாத தமிழ் மக்கள் கூட்டணிக்கு எவ்வாறு அழைப்புக் கடிதம் அனுப்பப்படுகின்றது? இந்த விடயம் தொடர்பில் நாம் எழுப்பிய கேள்விகளுக்கு இன்னமும் சரியான பதில் வழங்கப்படவில்லை.
அத்துடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வரைவுகளுக்காக தற்போது நிபுணர்குழு அமைக்கத் தேவையில்லை என்றும், காலப்போக்கில் அது தொடர்பில் தீர்மானிக்கலாம் எனவும் நாங்கள் கூறியிருந்தோம். எனினும் எமது கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை. எனவே, தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகளில் தமிழ்த் தேசியப் பேரவை திருப்திகொள்ள முடியாத நிலையே தற்போது உள்ளது. தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் தொடர்ச்சியான செயற்பாடுகளை அவதானித்து அடுத்தகட்டத் தீர்மானங்களை மேற்கொள்வோம் - என்றார். (அ-ம-26)

## செம்மணிப்...

நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.
இதன்போதே, ஏற்கனவே அடையாளப்படுத்தி வைக்கப்பட்ட மூன்று என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டன.
இதேவேளை, செம்மணிப் புதைகுழிக்குள் குவியலாகவும், சிதிலமடைந்தும் என்புகள் அவதானிக்கப்பட்டிருந்தன. அவற்றில் சிலவும் நேற்றையதினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 255 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 252என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 10ஆம் நாள் நடவடிக்கைகள் இன்று தொடரவுள்ளன.
பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பேருந்து...

தார். புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த சிறீரமணன் விதுசன் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு நோக்கிப் பயணித்த சுற்றுலாப் பேருந்தும், குறிகாட்டுவானில் இருந்து மத்துவெளி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுமே புங்குடுதீவு மத்துவெளி பகுதியில் இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன. மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## தையிட்டி...

விடு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில், காணிவிடுவிப்புத் தொடர்பில் நிச்சயமற்ற நிலை நிலவுகின்றது.
இவ்வாறான நிலையிலேயே, தையிட்டி திஸ்ஸ விகாரையை யாழ். மறைமாவட்ட ஆயர் நேற்றுப் பார்வையிட்டார்.
தையிட்டி விகாரைக்காக, வலி.வடக்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பவானி வீதியை ஆக்கிரமித்து எல்லை அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதை அகற்றுமாறு எதிர்வரும் 11ஆம் திகதிவரை பிரதேசசபையால் விகாராதிபதிக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயமும் பதற்றத்துக்கு உரியதாக மாறிவரும் நிலையில், திஸ்ஸ விகாரைக்கு ஆயர் பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## எரிவாயு...

கிராம் லாப்ஸ் எரிவாயுவின் விலை 545 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 5 கிலோகிராம் லாப்ஸ் எரிவாயுவின் புதிய விலையாக 2 ஆயிரத்து 500 ரூபாவும், 12.5 கிலோகிராம் லாப்ஸ் எரிவாயுவின் விலை 6 ஆயிரத்து 245 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ஜே.சி.பி...

நோக்கிப் பயணித்த ஜே.சி.பி.யும், யாழ்ப்பாணத்தில் இருந்து மருதனார்மடம் நோக்கி பயணித்த காரும் மோதியே இந்தக் கோரவிபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காரின் சாரதி படுகாயம் அடைந்துள்ளதுடன், கார் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.
படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஜே.சி.பி.யின் சாரதி சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## குற்றவாளிகளுக்கு...

புங்குடுதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற வேளை கடத்தப்பட்டுக் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. விசாரணைகளின் நிறைவில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட நபர்களுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உள்ளிட்ட மூவரடங்கிய ட்ரயல் அட்பார் தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
இந்த நிலையில் தங்களை விடுவிக்கக் கோரி சுவிஸ்குமார் உள்ளிட்ட குற்றவாளிகள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். உயர்நீதிமன்றப் பிரதம நீதிபதி பத்மன சூரசேன தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு குற்றவாளிகளின் மேன்முறையீடுகளை விசாரணை செய்தது. இந்தநிலையில், அவர்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை தற்போது மீள உறுதிசெய்யப்பட்டுள்ளது. (அ-ம-66-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம்மிக்க பஞ்சாப்பை வென்றது ஹைதராபாத்



## புள்ளிப்பட்டியலிலும் முதலிடம்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பலம்மிக்க பஞ்சாப்பைத் தோற்கடித்து புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்தது ஹைதராபாத் அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கிளாசன் 69 ஓட்டங்களையும், இஷான் கிஷான் 59 ஓட்டங்களையும், ஹெட் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர்களான பிரியான்ஸ் ஆர்யா ஓர் ஓட்டத்துடனும், பிரப்சிம்ரன் சிங் 3 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். தடுமாற்றம் தொடர அந்த அணியால் 202 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதையடுத்து 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்தது ஹைதராபாத் அணி. (ம)



# வலிகாமம் வலய எல்லே போட்டி விக்டோரியாக் கல்லூரி சம்பியன்!

யாழ்ப்பாணம், மே 7

வலிகாம வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில், சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இறுதிப்போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும் நேருக்கு நேர் மோதின. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் சமமான ஓட்டங்களைப் பெற்றதால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க இரு அணிகளுக்கும் தலா 5 பந்துகள் வீசும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி முதலாம் இடத்தைப் பிடித்து வலயமட்டச் சம்பியனாகத் தெரிவானது. (ச-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் 08 நிலபரப்பு காணி விற்பனைக்கு

- 16 அடி பாதையுடன் ஒரு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சாவகச்சேரி நகரத்தில் இருந்து **1 1/2km** தூரத்தில்
- **A-9** வீதியில் இருந்து **300 m** தூரம் சிவபூமி பாடசாலை **200 m** தூரம்
- சாவகச்சேரி வேலாயுதம் வீதியில் (சிவபூ பாடசாலை வீதி)
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி, நன்னீர் ஊற்று நிலம்
- நகர சபை சிறுவர் விளையாட்டு பூங்கா **400 m** தூரத்தில்
- ஒரு பரப்பின் விலை முன் பகுதிகள் **1500000/=** பதினைந்து இலட்சம் ரூபாய் முதல் **1300000/=** பதின்மூன்று இலட்சம் வரை
- பார்வையிடும் நேரம்: காலை 9.00 தொடக்கம் மாலை 6 வரை

**தொடர்பு:- 0772880152 0767390413**

(CS 31763) A



**சிவந்திரு சோ.சந்திர சிகாமணிக் குருக்கள்**
**அருந்தவநாயகி அம்மா தம்பதியரின்**
**50 வது ஆண்டு திருமண நிறைவு விழா**




### வாழ்த்துக் கவிதை

மந்துவில் முத்துமாரி அம்மனின்
மகத்தான பிரதம குருவே
சரசாலை பெற்றெடுத்த சந்திர சிகாமணியே
சாக்த மத போதகரே
வஞ்சனைகள் ஏதுமற்ற வள்ளலே
சூரியன் உதிக்க மறந்தாலும்
உம் பணி நேரம் தவறாது
அறநெறிப் பாடசாலை அவனியில் தழைத்தோங்க
அரும்பணியாற்றியவரே
ஆண்டவன் திருவடியன்றி அடுத்தவன் காலில் விழாதவரே
அவனருள் பெற்று அவனியில் நீடு வாழ்வீர்
பத்தாவுக் கேற்ற பத்தினியே
அன்னைக்கு நிகரான அருந்தவ நாயகியே
பாரினில் பெண்மைக்கு அணிகலமானவரே
வன்முறையை மனதாலும் நினையாதவரே
ஐம்பதாவதாண்டு திருமண நிறைவல்ல
அவனியுள்ளவரை தீர்க்க சுமங்கலியாக வாழ்வீராக !

வாழ்த்துபவர்:- சி.இராஜகுலசிங்கம்
பொறுப்பாசிரியர் - முத்துமாரியம்மன்
மந்துவில் வடக்கு அறநெறிப் பாடசாலை, கொடிகாமம்

(CR/47501) J-1



## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 06 . 1931



இறப்பு 06 . 05 . 2026

**அருணாசலம் தர்மலிங்கம்**

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் தர்மலிங்கம் அவர்கள் நேற்று (06.05.2026) தமது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வினாசித்தம்பி அருணாசலம், திருமதி அருணாசலம் மாசிலாமணி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் – சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். காலஞ்சென்றவர்களான மகாதேவன், கனகம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான இராமநாதன், கனகசபை ஆகியோரின் அன்பு மைத்துனரும். மங்கையற்கரசி அவர்களின் அன்பு கணவரும், சக்திவேலன் (பாபு)அவர்களின் அன்புத் தந்தையும். கௌசலா (சாந்தி), அவர்களின் மாமனாரும். ஹரன்ணியா, விதுரன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும். தயாபரன், மீனலோஜினி, காலஞ்சென்ற கயமுகன்,நாளாயினி ஆகியோரின் அன்பு மாமாவும், லதாங்கி ,கம்சத்வனி, ஹரிபவன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை 07.05.2026 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்திக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் .

தொடர்புகளுக்கு: **076 590 7294**
தகவல்: **குடும்பத்தினர்.**

(CS 317641)A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.